## குமரி - கோவளம் கடற்கரையில் அதிகாலையில் நடைபயிற்சியின்போது

# முதல்வர் மு.க.ஸ்டாலின் மீனவர்களிடம் வாக்குச் சேகரித்த காட்சி!

## “எங்கள் வாக்கு உதயசூரியனுக்கே” என உறுதியளித்தனர்!




கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு நேற்று (4.4.2026) வருகைபுரிந்த கழகத் தலைவரும், முதலமைச்சருமான . மு.க. ஸ்டாலின் அவர்கள், கோவளம் கடற்கரைப் பகுதியில் நடைபயிற்சி மேற்கொண்டபோது, அங்குள்ள வாக்காளர் பெருமக்களை சந்தித்து, வாக்கு சேகரித்தார். உடன் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், கன்னியாகுமரி தொகுதி கழக வேட்பாளருமான ரெ. மகேஷ் உள்ளார்.

## சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் 6—ஆம் வகுப்பு முதல் மும்மொழிக் கொள்கை!

# இந்தியைத் திணிக்கும் கபட நாடகத்தின் உச்சம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, ஏப்.5-**

**“சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் மும்மொழிக் கொள்கையை அமல்படுத்தப்போவதாக ஒன்றிய அரசு அறிவித்திருப்பது இந்தியைத் திணிக்கும் முயற்சியாகும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

தேசியக் கல்விக் கொள்கை 2020-ஐச் சார்ந்து, அண்மையில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள சி.பி.எஸ்.இ. பாடத் திட்டம் என்பது சாதாரண கல்விச் சீர்திருத்தம் அல்ல; அது மொழித் திணிப்பை நோக்கிய, நாம் நீண்டகாலமாக வெளிப்படுத்தி வந்த அச்சங்களை உறுதிப்படுத்தும் வகையிலான, நன்கு திட்ட மிடப்பட்ட ஆழ்ந்த கவலைக்குரிய முயற்சியாகும்.

“இந்திய மொழிகளை ஊக்குவிக்கிறோம்” என்ற போர்வையில், இந்தியாவின் செழுமையான மற்றும் பன்மைத்துவம் நிறைந்த மொழிப் பாரம்பரியத்தைத் திட்டமிட்டு ஒதுக்கி, இந்திக்கு முன்னுரிமை அளித்து மையப்படுத்தும் செயலை அரசியல் நோக்கத்துடன் பா.ஜ.க. தலைமையிலான NDA அரசு தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. “மும்மொழிக் கொள்கை” என்பது, உண்மையில் இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியை விரிவுபடுத்தும் முயற்சியாகும்.

**பாகுபாட்டை வெளிப்படுத்துகிறது!**

தென் மாநில மாணவர்களைப்



பொறுத்தவரையில், இந்தத் திட்டம், கட்டாய இந்தி என்பதைக் கடந்து வேறேதுமில்லை. இருப்பினும், இதில் ஒருவருக்கொருவர் இடையிலான பரிமாற்றம் எங்கே இருக்கிறது? இந்தி பேசும் மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் அல்லது வங்கம், மராத்தி உள்ளிட்ட மொழிகளைக் கட்டாயமாகப் படிப்பார்களா? இதுகுறித்த தெளிவின்மை, இதிலுள்ள ஒருசார்பையும் - பாகுபாட்டையும் வெளிப்படுத்துகிறது.

இந்த முரண் வெளிப்படையானது, இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழைக் கட்டாயமாக்க முடியாத தொடர்ச்சியாகப் போதிய தமிழாசிரியர்களை நியமிக்கத் தவறிய இதே ஒன்றிய அரசு, இந்திய மொழிகளை ஊக்குவிக்கிறோம் என்று மாநிலங்களுக்குப் பாடம் எடுக்க நினைக்கிறது. இது பொறுப்புணர்வல்ல; கபட நாடகத்தின் உச்சம்!

**உள்நோக்கம் கொண்டது!**

ஆசிரியர்களின் எண்ணிக்கை, போதிய பயிற்சிக்கான திறன் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவை குறித்த உண்மைக் களநிலவரத்தை ஒன்றிய அரசு உணர்ந்திருக்கிறதா? இந்தச் செயல்திட்டத்தை அமல்படுத்த தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் எங்கே இருக்கிறார்கள்? கல்வித் துறையில் மிகப்பெரிய சுமையை ஏற்படுத்தும் இந்த நகர்வுக்கான நிதி ஆதாரம் எங்குள்ளது? எவ்விதத் திட்டமிடலும், வளங்களும், பொறுப்பும் இல்லாத உள்நோக்கம் கொண்ட மற்றுமோர் திட்டமாகவே இது தோன்றுகிறது.

இது மொழி குறித்த கேள்வி மட்டுமல்ல; நியாயம், கூட்டாட்சி மற்றும் சமவாய்ப்புகள் குறித்த கேள்விகளுமாகும். இந்தி பேசும் மாணவர்களைக் கட்டமைப்புரீதியான சலுகைகளை அளித்து, உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் அவர்களுக்கு ஆதாயம் ஏற்படுத்துவதோடு, மாநிலங்களுக்கிடையே மேலும் ஏற்றத்தாழ்வுகளையே இது உண்டாக்கும்.

முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் உலகம் முன்னோக்கி நகரும் வேளையில், நம் குழந்தைகள் எதிர்காலத்திற்காகத் தயாராக இருக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவு, அனிமேஷன் விஷுவல் எஃபக்ட்ஸ் கேமிங் காமிக்ஸ் உள்ளிட்ட துறைகளில் அவர்களது திறனை மேம்படுத்தி, அவர்களது அறிவியல் பார்வையையும் திறனாய்வுச் சிந்தனையையும் ஊக்குவிக்க வேண்டும். மாறாக, இத்தகைய பிற்போக்குத்தனமான, இறுக்கமான மொழிச் சுமை அவர்களது முன்னேற்ற த்தைத் தடுப்பதாக உள்ளது.

**அவமதிக்கும் செயல்!**

தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் தொடர்ச்சியாக எழுப்பிய நியாயமான - ஜனநாயகப்பூர்வமான கவலைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, இந்தியைத் திணிப்பதில் ஒன்றிய அரசு மும்முரமாக இருப்பது தெரிகிறது. இந்தச் செயல், கூட்டுறவுக் கூட்டாட்சி யியலுக்கு எதிரானது, கோடிக்கணக்கான இந்தியர்களின் மொழி அடையாளங்களை நேரடியாக அவமதிக்கும் செயல்.

இந்தியாவின் வலிமை என்பது, பன்முகத்தன்மையில்தான் இருக்கிறதே தவிர, திணிக்கப்படும் ஒற்றைத் தன்மையில் இல்லை. இந்தச் சமநிலையைக் குலைக்கும் எத்தகைய முயற்சிகளும் தவறானவை மட்டுமல்ல, ஆபத்தானதுமாகும். நம் நாட்டின் அடிப்படையான பன்மைத்துவத்தையே தாக்கும் இத்தகைய கொள்கைகள் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டியவையாகும். பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க.வும், அதன் NDA கூட்டணிக் கட்சிகளும் இந்தத் திணிப்பை ஏற்றுக்கொள்கின்றனரா? அல்லது நமது மாணவர்களின் எதிர்காலம், அடையாளம் மற்றும் உரிமைகளுக்காக ஒரே ஒரு முறையாவது முதுகெலும்போடு எதிர்ப்பார்களா?

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.



கரூர் சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் ஆசி. எம். தியாகராஜன் வேட்புமனு தாக்கல் செய்தார். இந்நிகழ்வினை முன்னிட்டு கரூர் – கோவை சாலையில் தேர்தல் பணிமனை திறப்பு விழா நடைபெற்றது. இதில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்து கரூர் மாவட்டச் செயலாளர், மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார். ஆயிரக் கணக்கில் தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. தேர்தல் அறிக்கை - இரண்டு முக்கிய அம்சங்கள்!

தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சமூக நீதி மற்றும் தமிழ் மொழி காத்தல் என்ற இரண்டு தலைப்புகளில் வெளி வந்த கருத்துக்களை சுட்டிக்காட்ட வேண்டும்.

**“சமூக நீதி என்பது உயர்ந்தவர்களை கீழே இறக்கி விடுவது அல்ல; மாறாக பள்ளத்தை சமப்படுத்தி மேடாக்குவது தான்” என்ற பெரியார் விளக்கத்தோடு துவங்குகிறது அறிக்கை.**

இரண்டு முக்கிய அம்சங்கள் இதில் இடம்பெற்றிருக்கின்றன.

சாதிவாரி கணக்கெடுப்பின் தரவுகள் அடிப்படையில் உரிய பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படும்.

தனியார் நிறுவனங்களில் ஆண்டுக்கு ரூ. 20 லட்சத்துக்கு மேல் ஊதியம் பெறும் உயர் பதவிகளில், ஆதி திராவிடர்; பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோரை அமர்த்துவதற்கான திட்டமொன்றை தேர்தல் அறிக்கை முன் வைத்திருக்கிறது. அதாவது இப்படி வாய்ப்பு அளிக்கும் தனியார் நிறு வனங்களுக்கு சலுகைகளாக அரசே மானியங்களாக முதலீடு செய்வதோடு வேறு பல சலுகைகளையும் வழங்கும் என்று தேர்தல் அறிக்கை கூறுகிறது. தனியார் நிறுவனங்களின் உயர் அதிகார மையங்கள் விளிம்பு நிலை மக்களுக்கு தொடர்ந்து மறுக்கப்படு கின்றன; இதை மாற்றி அமைக்க திராவிட மாடல் ஆட்சி முன் வைத்துள்ள திட்டம் இது. இப்படி ஒரு திட்டத்தை; சிந்தனையை வேறு எந்த மாநிலத்திலாவது பார்க்க முடியுமா? தமிழ் வளர்ச்சி எனும் தலைப்பில் இடம் பெற்றுள்ள கருத்துகளும் மிகவும் முக்கியத்துவம் பெற்றவை.

“பாரதிய பா ஷா பரிவார்” என்ற அமைப்பை உருவாக்கியுள்ள ஒன்றிய ஆட்சி_இந்தியாவின் அனைத்து மொழிகளுக்கும் தாய் மொழி சமஸ்கிருதம் தான் என்று நிறுவ முயல்வதை அறிக்கை சுட்டிக்காட்டி எச்சரிக்கிறது.

இதை முறியடித்து திராவிட மொழிகளின் தனித்துவத்தையும் பண்பாட்டுக் கூறுகளையும் காப்பதற்கான அனைத்து முயற்சிகளிலும் தொடர்ந்து ஈடுபடும் என்ற உறுதியை இந்த அறிக்கை தருகிறது.

அதற்காக அரசு மேற்கொள்ள இருக்கும் விரிவான திட்டங்களை அறிக்கை பட்டியலிட்டுள்ளது. தமிழ் மொழியின் பல்வேறு வட்டார வழக்குகள், பண்பாடுகள் குறித்த அனைத்து தகவல்களையும் சேகரித்து செயற்கை நுண்ணறிவு அறிவியல் உதவியுடன் களஞ்சியம் ஒன்றை தயாரித்தல்; பல்வேறு துறைகள் குறித்து பன்னாட்டு இதழ்களில் வெளி வரும் கட்டுரைகளை தமிழாக்கம் செய்தல்; அதற்கேற்ற தமிழ் கலைச் சொற்களை உருவாக்குதல்; தமிழ் மொழி மற்றும் தமிழர் பண்பாடுகளை சிறப்பாக காட்சிப்படுத்தும் திரைப்படங்களுக்கு கலைஞர் பெயரில் விருது வழங்குதல்;

தமிழ்நாடு மற்றும் தமிழர் தொடர்பான அனைத்து கல்வெட்டுகளையும் சேகரித்து டிஜிட்டல் மயமாக்குதல்; கல்வெட்டுகளின் பெரும் களஞ்சியமாக நூல் தொகுப்பை உருவாக்குதல்; என்று பல்வேறு திட்டங்களை முன் வைக்கிறது தேர்தல் அறிக்கை.

**வேத மத பண்பாடுகளுடன் தமிழையும் தமிழரையும் இணைக்க நடக்கும் அத்தனை சதிகளையும் முறியடிப்பதற்கான திட்டங்களாக இவை முன்வைக்கப்படுகின்றன. இவை அனைத்தும் தமிழ்நாட்டின் எந்த ஒரு கட்சி சார்பான பிரச்சினை அல்ல; மாறாக தமிழ்நாட்டின் ஒருமித்த பிரச்சினை.**

**அதனால்தான் இந்த தேர்தல் ஒட்டு மொத்த தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும் நடக்கும் தேர்தல் என்று தமிழ்நாடு முதலமைச்சர் ஒவ்வொரு கூட்டங்களிலும் வலியுறுத்துகிறார். வாக்குரிமையோடு நாட்டுரிமையையும் இணைத்து நடக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் இது .**

**கங்கைச் சமவெளி நாகரிகத்திற்கு பிந்தியதே கீழடி தமிழர் நாகரிக ஆய்வுகள் என்று வரலாற்றைத் திருத்தி காலத்தை மாற்றச் சொல்லி ஒப்புதல் தர மறுக்கிறது ஒன்றிய ஆட்சி தமிழர் நாகரிகத்தை இருட்டடிக்கும் இந்த துரோகத்தைக் கூட கண்டிக்க எடப்பாடி தயாராக இல்லை .அவர் வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலும் இதுகுறித்து எந்த கண்டனமும் இல்லை. இது தமிழர்களுக்கு இழைக்கும் மகத்தான துரோகம் அல்லவா?**

**மீட்போம் நாட்டுரிமையை!**
**வீழ்த்துவோம் துரோகிகளை!**



**விடுதலை இராஜேந்திரன்**
திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர்